சுருக்கம்

மறுவாழ்வு – அயலகத் தமிழர் நலன் – தமிழ்நாடு அரசின் 06.10.2021 அன்றைய செய்தி வெளியீடு – புலம்பெயர் தமிழர் நல வாரியத்தின் நிருவாகப் பணிகளை மேற்கொள்ள 9 பணியிடங்களை புதியதாக தோற்றுவித்து வாரியத்தின் பயன்பாட்டிற்காக தொடரா செலவினமாக ரூ.3.694 கோடி மற்றும் தொடரும் செலவினமாக ரூ.88.96 இலட்சம் ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொது(மறுவாழ்வு.2)த் துறை

**அரசாணை(நிலை)எண்.516** **நாள். 18.08.2023.**

சோபகிருது வருடம், ஆவணி–1
திருவள்ளுவர் ஆண்டு–2054
படிக்கப்பட்டது:

1. தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண்.842, நாள் 06.10.2021.
2. அரசாணை(நிலை) எண்.827, பொது(மறுவாழ்வு–2)த் துறை, நாள் 24.12.2022.
3. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களின் கடித ந.க.எண். இ1/7171/2018, நாள் 14.03.2023 (ம) 22.06.2023.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க அறிவித்த பல்வேறு நலத்திட்டங்களுள் கீழ்க்காணும் அறிவிப்பும் அடங்கும்:–

> **"புலம்பெயர் தமிழர் நல வாரியம்" அமைக்கப்படும். அரசு மற்றும் புலம்பெயர்ந்த தமிழர் பிரதிநிதிகள் பதிமூன்று பேரைக் கொண்டு இந்த வாரியம் அமைக்கப்படும். 5 கோடி ரூபாய், "புலம்பெயர் தமிழர் நலநிதி" என மாநில அரசின் முன்பணத்தைக் கொண்டு உருவாக்கப்படும். மூலதனச் செலவினமாக ரூபாய் 1 கோடியே 40 இலட்சம் மற்றும் தொடர் செலவினமாக, நலத்திட்டங்கள் மற்றும் நிர்வாகச் செலவினங்களுக்காக ரூபாய் 3 கோடி ஆண்டு தோறும் ஒதுக்கப்படும்".**

2. மாண்புமிகு முதலமைச்சரின் மேற்காணும் அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்கும் முகமாக, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், அயலகத்

த.பி.பா..

தமிழர் நலனுக்காக "புலம்பெயர் நல வாரியம்" தோற்றுவிக்கப்பட்டு அவ்வாரியத்திற்கு தலைவர் மற்றும் 14 உறுப்பினர்கள் நியமனம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட 22.06.2023-ஆம் நாளிட்ட அயலகத் தமிழர் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரின் கடிதத்தில், அரசால் அமைக்கப்பட்டுள்ள புலம் பெயர் தமிழர் நல வாரியத்திற்கான நல நிதி, தொடரும் மற்றும் தொடரா செலவினம் குறித்து அரசுக்கு கீழ்க்கண்டவாறு கருத்துரு சமர்ப்பித்துள்ளார்:-

<u>அட்டவணை - அ</u>

**(அ) தொடரா செலவினங்கள்:**

| வ. எண் | பொருள் | தோராய செலவினம் ரூ. (கோடியில்) |
|---|---|---|
| 1 | அயலகத் தமிழர் நல நிதி | 5.00 |
| 2 | அலுவலக மாற்றம் (மரச்சாமான்கள், மின் சாதனங்கள் ஏற்படுத்துதல், அலுவலக உபகரணங்கள் (குளிர் சாதனப் பெட்டி, நகல் /எடுக்கும் கருவி, தொலையச்சு இயந்திரம்) | 0.40 |
| 3 | வாரியம் இயங்க உள்ள கட்டிடத்திற்கான மறு சீரமைப்பு பணிகள் | 0.75 |
| 4 | கணிணி சம்பந்தமான உபகரணங்கள் மற்றும் அச்சுப்பொறி | 0.55 |
| 5 | புதிய வாகனங்கள் வாங்குதல் (கார்) | 0.33 |
| | **மொத்தம்** | **7.03** |

**(ஆ) தொடர் செலவினங்கள்:**

| வ. எண் | பொருள் | தோராய செலவினம் ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஊதியம் ( அட்டவணை ஆ) | 50.40 |
| 2 | வாடகை கட்டணம் ** | 25.00 |
| 3 | தொலைபேசி/ தபால் | 10.00 |
| 4 | மின்சாரம் /சில்லறை செலவினம்/ மென்பொருள் பராமரிப்பு | |

| | | |
|---|---|---|
| 5 | பெட்ரோல் மற்றும் இதர செலவினம் | 2.00 |
| 6 | பயண செலவினங்கள் (வெளி நாட்டு பயணம் உட்பட) | 20.00 |
| 7 | அச்சிடுதல் மற்றும் எழுதுபொருட்கள் | 5.00 |
| 8 | வாகனம் பராமரித்தல் | 1.00 |
| 9 | இதர செலவினங்கள் | 7.00 |
| | **மொத்தம்** | **120.40** |

** மேலும் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் புலம்பெயர் நல வாரியம் இயங்குவதற்கு ஏதுவான கட்டடம், அத்துறைக்கு சொந்தமாக இல்லாத நிலையில், DPI வளாகத்தில் உள்ள பள்ளி கல்வி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கட்டடத்தில், வாடகைக்கு இயங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் மேலும், அக்கட்டடத்தில் மறு சீரமைப்பு பணிகள் நடைபெற தேவை உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

**<u>அட்டவணை – ஆ</u>**

பணியிடங்களுக்கான தோராய ஆண்டு செலவின விபரம்:

| **வ. எண்** | **பதவி** | **(ஊதிய விகித நிலை) (ரூ)** | **பணியிட எண்ணிக்கை** | **ஆண்டு செலவினம் (ரூ)** |
|---|---|---|---|---|
| 1 | நிருவாக அலுவலர்கள் | (ஊதிய விகிதம் 56,100–205700) ஊதிய நிலை – 22 | 2 | 13,46,400 |
| 2 | கண்காணிப்–பாளர் | (ஊதிய விகிதம் 36,900–1,35,100) ஊதிய நிலை – 18 | 2 | 8,85,600 |
| 3 | உதவியாளர்கள் | 24,000 | 6 | 17,28,000 |
| 4 | நிரலர் | 24,000 | 1 | 2,88,000 |
| 5 | பதிவுறு எழுத்தர் | 18,000 | 1 | 2,16,000 |
| 6 | அலுவலக உதவியாளர்கள் | 15,000 | 2 | 3,60,000 |
| 7 | ஓட்டுநர் | 18,000 | 1 | 2,16,000 |
| | **மொத்தம்** | | | **50,40,000** |

4. புலம்பெயர் நல வாரியம் தொடர்பாக அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் கீழ்க்காணும் இனங்களுக்கு உரிய ஆணைகள் வழங்குமாறும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்:-

நல வாரியத்திற்கான நிருவாக அலுவலர் மற்றும் கண்காணிப்பாளர் பணியிடங்களை அரசுத் துறைகளில் பணியாற்றுபவர்களை அயற்பணி மூலமாகவோ (Deputation) அல்லது அரசுத் துறைகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களைக் கொண்டோ நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி நிரப்பிக்கொள்ளுதல்.

- எஞ்சியுள்ள 5 பணிநிலைகள் வெளி முகமை (Out Sourcing) மூலமாக நிரப்பிக்கொள்ளுதல்.
- நல வாரியத்தின் மூலமாக பணிகளை மேற்கொள்ள தொடரா செலவினமாக ரூ. 7.03 கோடியும் மற்றும் தொடர் செலவினமாக ரூ.120.40 இலட்சமும் ஒதுக்கீடு செய்தல்.

5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 06.10.2021-அன்று வெளியிட்ட மேற்காணும் செய்தி வெளியீட்டினை நிறைவேற்றும் விதமாக, அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்தபின், அதனை ஏற்று, புலம்பெயர் நல வாரியம் அமைக்கப்பட்டதனை தொடர்ந்து இவ்வாரியத்திற்கான பணிகளை மேற்கொள்வதற்காக கீழ்க்காணும் 9 புதிய பணியிடங்கள் தோற்றுவித்து அதற்கான ஆண்டுச் செலவினமாக ரூ.24,96,000/-க்கு நிதி ஒப்பளிப்பும் புலம் பெயர் நல வாரியத்திற்கு வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ள உபகரணங்களுக்கு தேவையான தொடரா செலவினமாக ரூ.3.694 கோடியும் தொடரும் செலவினமாக ரூ.64.00 இலட்சமும் (ரூ.24.96 இலட்சம் + ரூ.64.00 இலட்சம் + ரூ.3.694 கோடி) ஆகமொத்தம் ரூ.4,58,36,000/- (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்தெட்டு இலட்சத்து முப்பத்தாறாயிரம் மட்டும்) கீழ்கண்ட விவரங்களின் அடிப்படையில் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:

**I. பணியிடங்கள்:- (தொடரும் செலவினம்)**

| வ. எண் | பதவி | ஊதியநிலை (ரூ) | ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படின் மாதாந்திர ஊதியம் (ரூ) | அனுமதிக்கப் படும் பணியிடங்கள் | ஆண்டு செலவினம் (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1. | நிருவாக அலுவலர்கள் (துணை ஆட்சியர் நிலையில்) | நிலை – 22, (56,100-205700) (Regular & Permanent) | - | 1 | 4,80,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | அலுவலக கண்காணிப் –பாளர்கள் | நிலை – 18, (36,900 – 1,35,100) (Regular & Permanent) | – | 1 | 3,60,000 |
| 3. | உதவியாளர் (போதுமான கணினி பயிற்சியுடன்) | – | 24,000 | 2 | 5,76,000 |
| 4. | நிரலர் (Programmer) | – | 24,000 | 1 | 2,88,000 |
| 5. | பதிவுறு எழுத்தர்/ எழுத்தர் | – | 18,000 | 1 | 2,16,000 |
| 6. | அலுவலக உதவியாளர் | – | 15,000 | 2 | 3,60,000 |
| 7. | ஓட்டுநர் | – | 18,000 | 1 | 2,16,000 |
| | **மொத்தம்** | | | **9** | **24,96,000** |

**II. தொடரா செலவினம் :**

**(ரூ. கோடியில்)**

| **வ. எண்** | **பொருள்** | **ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை** |
|---|---|---|
| 1 | அயலகத் தமிழர் நிதி | 2.00 |
| 2 | அலுவலக மாற்றம் (மரச்சாமான்கள், மின் சாதனங்கள் ஏற்படுத்துதல், அலுவலக உபகரணங்கள், குளிர் சாதனப் பெட்டி, நகல் எடுக்கும் கருவி, தொலையச்சு இயந்திரம். | 0.40 |
| 3 | வாரியம் இயங்க உள்ள கட்டடத்திற்கான மறு சீரமைப்பு பணிகள் | 0.75 |
| 4 | கணினி சம்பந்தமான உபகரணங்கள் மற்றும் அச்சுப்பொறி | 0.33 |
| 5 | புதிய வாகனங்கள் வாங்குதல் | 0.214 |
| | **மொத்தம்** | **3.694** |

**III. தொடரும் செலவினம்**

**(ரூ. கோடியில்)**

| **வ. எண்** | **பொருள்** | **ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை** |
|---|---|---|
| 1 | வாடகை கட்டணம் | 0.25 |
| 2 | தொலைபேசி/தபால் | 0.10 |
| 3 | மின்சாரம் /சில்லறை செலவினம்/ மென்பொருள் பராமரிப்பு | |

| | | |
|---|---|---|
| 4 | பெட்ரோல் மற்றும் இதர செலவினம் | 0.02 |
| 5 | பயண செலவினங்கள் (வெளிநாட்டு பயணம் உட்பட) | 0.20 |
| 6 | அச்சிடுதல் மற்றும் எழுதுபொருட்கள் | 0.05 |
| 7 | இதர செலவினங்கள் | 0.02 |
| | **மொத்தம்** | **0.64** |

6. மேலே பத்தி 5-இல் புலம்பெயர் நல வாரியத்திற்காக தோற்றுவிக்கப்பட்டுள்ள 9 புதிய பணியிடங்களையும் அரசுத் துறைகளில் பணியாற்றுபவர்களை அயற்பணி மூலமாகவோ (Deputation), அரசுத் துறைகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களைக் கொண்டோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி நிரப்பிக் கொள்ள அயலகத் தமிழர் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், நிருவாக அலுவலர் பதவியானது துணை ஆட்சியர் நிலையில் தோற்றுவிக்கப்படுவதால், அயற்பணி மூலமாக நிரப்பக் கருதும் பட்சத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் அறிவுறுத்தலின்பேரில் நிரப்பட வேண்டும் என்றும், மேலும் அரசுப் பணிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களையோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ நியமனம் செய்யும் போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன் பிரிவு 19-இல் உள்ள சாராம்சங்களின்படி அரசாணை (நிலை) எண்.170, ப.ம.நி.சீ(எஸ்)த் துறை, நாள் 18.12.2007 மற்றும் அரசாணை (நிலை) எண்.15, ப.ம.நி.சீ (எஸ்)த் துறை, நாள் 3.2.2010-இல் உள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றி ஓய்வு பெற்ற பணியாளரை ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படவேண்டும் என்றும் தோற்றுவிக்கப்பட்டுள்ள 9 புதிய பணியிடங்களை நிரப்பும் தருவாயில் அரசின் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேலே பத்தி-5 இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்: (கோரிக்கை எண். 038-04)

2235 சமூகப் பாதுகாப்பு நலனும் - 01 மறுவாழ்வு - 001 நெறிப்படுத்தலும் நிர்வாகமும் மாநிலச் செலவினங்கள் - AA புலம் பெயர் தமிழர் நல வாரியம் -
- 309 உதவித்தொகை - 01 நடப்புச் செலவுக்கான உதவித்தொகை
த.தொ.கு. 2235-01-001-AA-30901

8. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" குறித்ததாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி(வ.செ.பொ.-I)த் துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில்

நடப்பு ஆண்டிற்குத் தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி(வ.செ.பொ.-I)த் துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய விளக்கக் குறிப்பினை தவறாது உரிய நேரத்தில் நிதி(பொது/வ.செ.பொ.-I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 7-இல் தோற்றுவிக்கப்பட்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். மேற்படி புதிய கணக்குத் தலைப்பை தங்களது பதிவேட்டில் துவக்கிக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. இவ்வரசாணை நிதி(பொது)த் துறையின் அலுவல் சார்பற்ற எண்.40118/நிதி(மை.ம.ஆ.பி)த்துறை/2023, நாள்.18.08.2023, ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.729 (எழுநூற்று இருபத்தி ஒன்பது) மற்றும் PSL No.202308PSL0155. (IFHRMS ASL No.2023080729).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. நந்தகுமார்**
**அரசுச் செயலாளர்**

<u>பெறுநர்</u>

ஆணையர்,
அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-8.
அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை -9.
அரசுச் செயலாளர்,
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை -9.

<u>நகல்</u>

மாநில கணக்காயர், சென்னை-18.

த.பி.பா..

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கூடுதல் தலைமைச் செயலாளர் / செயலாளர்-1, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் அலுவலகம், சென்னை - 9.
நிதி(பொது/வ.செ.பொ.I/II/வ.வ.I/மை.ம.ஆ.பி)த் துறை, சென்னை-9.
பொது(ம.வா.I/III)த் துறை, சென்னை-9.
பொது(அ.ந.மு.1)த் துறை, சென்னை-9.
பொது(பல்வகை)த் துறை, சென்னை-9.
உள்ளுரை தணிக்கை அலுவலர், சென்னை - 9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

**//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//**

18/8/2023

**பிரிவு அலுவலர்**

18/8/23